செய்தி வெளியீடு – 429 நாள் : 15.11.2006

முல்லைப் பெரியாறு பிரச்சினை குறித்து தமிழ்நாடு முதல் அமைச்சரும், கேரள முதல் அமைச்சரும் மத்திய அரசின் நீர்வள ஆதாரத் துறை அமைச்சர் முன்னிலையில் பேச்சுவார்த்தை நடத்தலாமென்று உச்ச நீதி மன்றம் தெரிவித்த கருத்துக்கிணங்க, மத்திய அமைச்சர் தமிழக முதல் அமைச்சர் அவர்களைத் தொடர்பு கொண்டு, பேச்சுவார்த்தைக்கான தேதி குறித்து கேட்டதின் அடிப்படையில் தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்கள் நவம்பர் திங்கள் 28, 29, 30 ஆகிய நாட்களில் வசதியான ஒரு நாளில் பேச்சுவார்த்தையை வைத்துக் கொள்ளலாம் என்று கருத்து தெரிவித்து இன்று மத்திய அமைச்சர் அவர்களுக்கு கடிதம் எழுதியுள்ளார்கள்.